ஐம்பூதங்கள் பற்றிய ஐந்து நெடுங்கவிதைகளின் பெருந்தொகுப்பு!

# கவிப்பேரரசு வைரமுத்துவின் 'மகா கவிதை!'

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நாளை வெளியிடுகிறார்!



**சென்னை, டிச. 31-**

**கவிப்பேரரசு வைரமுத்துவின் புதிய படைப்பான 'மகா கவிதை' நூலை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நாளை (ஜனவரி 1 ஆம் தேதி) வெளியிடுகிறார்.**

**சென்னைக் காமராசர் அரங்கில் மாலை 6 மணிக்கு விழா நடைபெறுகிறது. நூலின் முதற்படியை ஒன்றிய முன்னாள் அமைச்சர் ப.சிதம்பரம் பெற்றுக் கொள்கிறார். கலைஞானி கமல்ஹாசன், விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரை இருவரும் வாழ்த்துரை வழங்குகிறார்கள். கவிப்பேரரசு வைரமுத்து ஏற்புரை ஆற்றுகிறார்.**

'மகா கவிதை' என்பது நிலம், நீர், காற்று, தீ, வெளி என்ற ஐம்பூதங்கள் பற்றிய ஐந்து நெடுங் கவிதைகளின் பெருந்தொகுப்பு ஆகும். கவிப்பேரரசு வைரமுத்துவின் 30 மாதக் கடும் உழைப்பினால் உருவானது இந்தக் கவிதை நூல்.

“அகவியல் - புறவியல் - அறவியல் இறையியல் என்றெல்லாம் பேசிய தமிழ்க்கவிதை முதன்முதலில் முழுக்க அறிவியல் பேசுகிறது. ஐம்பூதங்களின் அறிவியலும் ஈராயிரமாண்டு நீண்டு கிடக்கும் தமிழ்க் கவிதையின் அழகியலும் ஒருங்கிணைந்த பெருங்கவிதை மகா கவிதை. இளைய தலைமுறையின் எதிர்காலத்திற்கு இந்த மகா கவிதை விஞ்ஞான வாசலைத் திறந்துவிடும்” என்று கவிப்பேரரசு வைரமுத்து உறுதிபடத் தெரிவிக்கிறார்.

**ரூ.5 லட்சம் பரிசு!**

'மகா கவிதை' என்ற தலைப்பின் ஐந்து எழுத்துக்களிலும் இந்த நூலின் ஐந்து உள்ளடக்கங்கள் மறைந்திருக்கின்றன. அவற்றைக் கண்டுபிடித்துச் சரியான விடை சொல்பவர்க்கு ஐந்து லட்சம் பரிசு - என்று கவிப்பேரரசுவைரமுத்துஏற்கெனவேஅறிவித்திருந்தார்.

அந்தப் போட்டியில் வெற்றிபெற்றவர்கள் மேடையிலேயே அறிவிக்கப்படுவார்கள் மற்றும் முதலமைச்சர் கரங்களால் பரிசு பெறுவார்கள்.

கவிப்பேரரசு வைரமுத்துவின் பதிப்பகமான 'சூர்யா இலக்கியம்' இந்நூலை வெளியிடுகிறது. வெற்றித் தமிழர் பேரவைத் தோழர்கள் விழாவிற்கான ஏற்பாடுகளை முனைந்து செய்து வருகிறார்கள்.



தூத்துக்குடி மாவட்டம் சுப்பையாபுரத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கழகத் துணைப் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற கழகக் குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் நிவாரணப் பொருட்களை வழங்கினார். உடன் அமைச்சர் கீதா ஜீவன் உள்ளார்.

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட

# தூத்துக்குடி மாவட்டத்தில் ரூ.6 ஆயிரம் நிவாரணத் தொகை !

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வழங்கினார்!

தூத்துக்குடி, டிச. 31-

தூத்துக்குடி மாவட்டத்தில் கடந்த 17 மற்றும் 18 ஆம் தேதிகளில் பெய்த அதி கனமழையின் காரணமாக மிகக் கடுமையாக பாதிப்பு ஏற்பட்டுள்ள ஏரல் வட்டம், திருக்களூர், உடையார் குளம் கிராமங்களில் நேற்று முன்தினம் (29.12.2023) கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் நேரில் ஆய்வு மேற்கொண்டு, பொதுமக்களுக்கு நிவாரணத்தொகையினை வழங்கினார்.

தூத்துக்குடி மாவட்டத்தில் கடந்த 17 மற்றும் 18 ஆம் தேதிகளில் பெய்த அதி கனமழையின் காரணமாக மிகக் கடுமையாக பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இந்த பாதிப்புகளில் இருந்து மக்களை மீட்க அனைத்துத் துறையினரும் மாவட்ட நிர்வாகத்துடன் ஒன்றிணைந்து பணியாற்றி தற்போது சகஜ நிலை திரும்பி வருகிறது.

முதலமைச்சர் அவர்கள் கடந்த 21.12.2023 அன்று திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் அதி கனமழையின் காரணமாக மிகக் கடுமையாக பாதிப்பு ஏற்பட்டுள்ள பகுதிகளை நேரடியாக ஆய்வு செய்தும், ஆய்வுக் கூட்டங்கள் வாயிலாக பாதிப்புகள் குறித்தும் கேட்டறிந்து, இந்த பாதிப்புகளிலிருந்து பொதுமக்களின் வாழ்வாதாரத்தை மீட்பதற்காக பின்வரும் அறிவிப்புகளை வெளியிட்டார்.

‘அதி கனமழையின் காரணமாக, தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் மிகக் கடுமையாக வெள்ள பாதிப்பு ஏற்பட்டுள்ள வட்டங்களில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடும்ப அட்டை அடிப்படையில் நிவாரணமாக 6 ஆயிரம் ரூபாயாக வழங்கப்படும்”.

மேலும், இந்த மாவட்டங்களில் உள்ள இதர வட்டங்களுக்கும் மற்றும் கன்னியாகுமரி, தென்காசி ஆகிய மாவட்டங்களிலும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு அங்குள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் 1000 ரூபாய் வழங்கப்படும் என தெரிவித்துக் கொள்கிறேன்”. என முதலமைச்சர் அவர்கள் அறிவிப்புகளை வெளியிட்டார்.

அதன்படி பாதிப்பு ஏற்பட்டுள்ள வட்டங்களில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணத்தொகை வழங்குவதற்கான டோக்கன் விநியோகிக்கும் பணி 26.12.2023 முதல் நடைபெற்றது. அதனைத்தொடர்ந்து தற்போது அனைத்து வட்டங்களிலும் நிவாரணத்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தலின்படி கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தூத்துக்குடி மாவட்ட ஏரல் வட்டத்தில் மழையினால் பாதிக்கப்பட்ட பகுதிகள் மற்றும் நிவாரணப்பணி நடைபெற்று வரும் பகுதிகளை ஆய்வு செய்தார். அது சமயம் முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட ரூ.6000 நிவாரணத்தொகை வழங்கி வரும் பணிகளையும் ஆய்வு மேற்கொண்டு பொதுமக்களுக்கு நிவாரணத்தொகையினையும் வழங்கினார்.

இந்நிகழ்வின் போது, திருக்களூர் ஊராட்சி மன்றத் தலைவர் பிரபஞ்சன், கூட்டுறவு சங்க மாவட்ட துணை பதிவாளர் ரவீந்திரன், வட்டாட்சியர் மலர் தேவன், கிராம நிர்வாக அலுவலர் கார்த்திக் ஆகியோர் உடன் இருந்தனர்.

ஆதிதிராவிடர் - பழங்குடியினர்

# தொழில் முனைவோருக்கான கண்காட்சி குறித்த விழிப்புணர்வு வாகனம்!

## அமைச்சர் கயல்விழி செல்வராஜ் துவக்கி வைத்தார்!

கோவை, டிச.31-

கோயம்புத்தூர், அவிநாசி, தி கிராண்ட் ரிசன்ட் ஹோட்டலில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தொழில் முனைவோருக்கான மாபெரும் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் (TNBEAT EXPO 2024) சென்னையில் நடைபெறுவது தொடர்பாக முன்னெடுப்பு நிகழ்ச்சி நேற்று முன்தினம் (29.12.2023) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டு கழகம் தலைவர் உ.மதிவாணன், தாட்கோ மேலாண்மை இயக்குநர் க.சு.கந்தசாமி. மாவட்ட ஆட்சித்தலைவர் கிராந்தி குமார் பாடி தூய்மை பணியாளர்கள் நலவாரியத்தின் துணை தலைவர் கனிமொழி, DICCI தலைவர் தினேஷ் சங்கர், தாட்கோ மாநில திட்ட மேலாளர் வசந்தி குமரேசன், கொடிசியா செயலாளர் சசிகுமார், சிஆர்.ஐ தலைவர் நவநீதி சிவக்குமார், நரிக்குறவர் சங்கத்தலைவர் சுப்பிர மணியன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

முன்னதாக, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தொழில்முனைவோருக்கான மாபெரும் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் (TNBEAT EXPO 2024)சென்னையில் நடைபெறுவது தொடர்பாக விழிப்புணர்வு வாகனத்தினை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் தெரிவித்ததாவது,

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி செயல்படும் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டு கழகம் (தாட்கோ) சார்பாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தொழில் முனைவோருக்கான மாபெரும் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் (TNBEAT EXPO2024) சென்னை வர்த்தக மையத்தில் வருகின்ற 26.01.2024 மற்றும் 27.01.2024 ஆகிய தினங்களில் நடைபெற உள்ளது. இக்கண்காட்சியில் 350 அரங்குகளில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சார்ந்த தொழில் முனைவர்களால் உற்பத்தி செய்யப்பட்ட 5 ஆயிரத்துக்கு மேற்பட்ட பொருட்களை பார்வைக்கும் மற்றும் விற்பனைக்கு வைக்கப்பட உள்ளது.

தமிழ்நாடு அரசின் மூலம் சுய தொழில்துவங்குவதற்கும் மத்திய மாநில அரசுகள் வழங்கும் மானியத்துடன் கூடிய வங்கி கடன் பெறுவது தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் அரங்குகள் அமைக்கப்பட உள்ளது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் புதிய தொழில் தொடங்குவதற்கான வழிகாட்டுதலும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கி தனியார் வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகளில் மூலம் தொழில் துவங்க விழிப்புணர்வும் மற்றும் வங்கிகள் மூலம் கடன் பெறும் வழிமுறைகளும் விளக்கப்பட உள்ளது.

தமிழ்நாட்டில் தமிழ்நாடு முதலமைச்சர் கொண்டுவந்துள்ள அண்ணல் அம்பேத்கர் தொழில்முனைவோர் திட்டத்தின் கீழ் புதிய தொழில் தொடங்க ரூ.1.50கோடி வரை மானியம் வழங்கப்படுகிறது. பட்டியலின பழங்குடியினர் தொழில்முனைவோர் நிதியின் கீழ் எந்தவொரு அடமானமும் இல்லாமல் கடனுதவி மானியத்துடன் வழங்கப்படுகிறது. தமிழ்நாடு அரசின் சார்பில் 35 சதவீதம் மானியம், 65 சதவீதம் வங்கிகள் மூலம் கடனுதவிகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

இதன் மூலம் தொழில் முனைவோர்கள் தங்கள் உற்பத்தி பொருட்களை கண்காட்சிபடுத்தும் வாய்ப்பினையும், தொழில் முன்னேற்றம் அடைய இக்கண்காட்சி மிக சிறந்த தளமாக அமைய உள்ளது மேலும் அரசு சார்ந்த ஒன்றிய மற்றும் மாநில பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் தனியார் துறையினரின் முன்னணி நிறுவனங்களில் இருந்து தங்கள் தயாரிப்பு பொருட்களை நேரடி கொள்முதல் செய்வதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தி தரப்பட உள்ளது.

மக்களுடன் முதல்வர் திட்டத்தின் கீழ் தாட்கோ துறையில் பெறப்படும் விண்ணப்பங்களில் புதிய தொழில் தொடங்குவது தொடர்பான விண்ணப்பங்கள் மீது விரைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. சென்னையில் நடைபெறும் கண்காட்சி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் முன்னேற்றத்திற்கு மிகவும் பயனுள்ளதாக அமையும். மேலும், குறு சிறு தொழிலாளர்கள் தங்களின் உற்பத்தி பொருட்களை ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்வது தொடர்பான விழிப்புணர்வு கூட்டமும் மற்றும் தொழிலில் சிறந்து விளங்கும் சிறப்பு தொழில் வல்லுநர்களைக் கொண்டு கருத்தரங்கம் நடைபெற உள்ளது இதன் மூலம் வியாபாரிகள் மற்றும் புதிய தொழில் முனைவோர்கள் மேன்மை அடைவார்கள்.

இவ்வாறு அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் தெரிவித்தார்.




கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தூத்துக்குடி மாவட்டத்தில் கடந்த 17 மற்றும் 18ஆம் தேதிகளில் பெய்த அதி கனமழையின் காரணமாக மிகக் கடுமையாக பாதிப்பு ஏற்பட்டுள்ள ஏரல் வட்டம், திருக்களூர், உடையார் குளம் கிராமங்களில் நேற்று முன்தினம் (29.12.2023) நேரில் ஆய்வு மேற்கொண்டு, பொதுமக்களுக்கு நிவாரணத்தொகையினை வழங்கினார். உடன், திருக்களூர் ஊராட்சி மன்றத் தலைவர் பிரபஞ்சன், கூட்டுறவு சங்க மாவட்ட துணை பதிவாளர் ரவீந்திரன், வட்டாட்சியர் மலர்தேவன், கிராம நிர்வாக அலுவலர் கார்த்திக் ஆகியோர் உள்ளனர்.


நினைவு அஞ்சலி



திரு. ஆலடி அருணா M.A.,B.L.

சமூகநீதி - இறையாண்மை - மாநில சுயாட்சிப் போராளியே !

என்றும் உங்கள் வழியில்

Dr. V.பாலாஜி
நிறுவனர் ஆலடி அருணா அறக்கட்டளை

Dr. பூங்கோதை ஆலடிஅருணா
திமுக மாநில சுற்றுச் சூழல் அணி தலைவர்